# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI

Daily Morning

Vol : 01 | Issue : 103 | 4 Pages | 16.11.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 103 | 4 பக்கங்கள் | 16.11.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## விவசாயிகளுக்கு 15வது தவணையாக தலா ரூ.2 ஆயிரம் நிதி உதவி: பிரதமர் மோடி வழங்கினார்



ஜார்க்கண்ட், நவ.16

விவசாயிகளுக்கு நிதியுதவி அளிக்கும் 'பிரதமரின் விவசாயிகள் நிதியுதவித் திட்டம்', பிரதமர் நரேந்திர மோடியால் கடந்த 2019ம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டது.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த, விவசாயிகளின் கடனைக் குறைக்க மற்றும் விவசாய முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தில் ஆண்டுக்கு 3 தவணைகளில் தலா ரூ.2,000 என மொத்தம் ரூ.6,000 விவசாயிகளின் வங்கி கணக்குகளில் செலுத்தப்படும்.

இத்திட்டத்தில் இதுவரை 14 தவணைகள் மூலம் தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு ரூ.2.59 லட்சம் கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 14வது தவணையான ரூ.17,000 கோடி கடந்த ஜூலை மாதத்தில் விடுவிக்கப்பட்டு 8.5 கோடி விவசாயிகள் பயனடைந்தனர்.

இந்நிலையில், ஜார்க்கண்ட் மாநிலத்தில் பழங்குடி சமூக போராளி பிர்சா முண்டாவின் பிறந்தநாளை முன்னிட்டு கொண்டாடப்படும் பழங்குடிகள் பெருமை தினத்தையொட்டி (புதன்கிழமை) நடைபெறும் கூட்டத்தில் பிரதமரின் விவசாயிகள் நிதியுதவி திட்டத்தின் 15வது தவணைத் தொகையான ரூ.18,000 கோடியை பிரதமர் நரேந்திர மோடி விடுவித்தார்.

## ஒரே வீட்டில் வசிக்கும் ஒரே குடும்பத்தை சேர்ந்த 199 பேர்



மிசோரம், நவ.16

கூட்டுக்குடும்ப வாழ்க்கை குறைந்து கொண்டே வரும் இன்றைய காலகட்டத்தில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 199 பேர் ஒரே வீட்டில் வசித்து வருவதும், அந்த வீடு சுற்றுலாதலமாக மாறி இருப்பதும் பேசு பொருளாகி இருக்கிறது.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மிசோரமில் உள்ள பக்தவாங் கிராமத்தில் தான் இந்த மிகப்பெரிய குடும்பம் உள்ளது. சியோனா சானா என்பவர் தான் இந்த குடும்பத்தின் தலைவர் ஆவார். 38 பெண்களை மணந்த அவருக்கு அந்தந்த மனைவிகள் மூலம் 89 குழந்தைகள் மற்றும் 36 பேரக் குழந்தைகள் உள்பட இந்த குடும்பத்தை சேர்ந்த 199 பேர் ஒரே வீட்டில் இருந்தனர். இவர்கள் அனைவரும் பக்தவாங் கிராமத்தில் 100 அறைகள் கொண்ட 4 மாடி கட்டிடத்தில் ஒரே குடும்பமாக வசித்து வந்தனர். உயர் ரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு பிரச்சனை காரணமாக கடந்த 2021ம் ஆண்டு சியோனா சானா தனது 76வது வயதில் மறைந்தார். அதன் பிறகும் அந்த குடும்பத்தினர் ஒரே வீட்டில் வசித்து பாரம்பரியத்துக்கு சான்றாக விளங்குகிறார்கள்.

சியோனா தனது முதல் மனைவியை 17 வயதில் திருமணம் செய்தாராம். அதன் பிறகு ஒரே வருடத்தில் 10 பெண்களை திருமணம் செய்துள்ளார். ஒவ்வொரு மனைவிகளுக்கும் தனி படுக்கை அறை மற்றும் தங்குமிடம் அமைத்து கொடுத்தாலும், ஒரே வீட்டில் தான் வசித்துள்ளனர். அவர் எல்லா நேரங்களிலும் 7 அல்லது 8 மனைவிகளை பக்கத்தில் வைத்திருப்பதை விரும்புவதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். பரந்து விரிந்த டைனிங் ஹாலில் முழு குடும்பமும் கூடி சாப்பிடும் போது அது ஒரு பெரிய ஹாஸ்டல் மெஸ் போல இருக்கும். அனைவரும் ஒன்றாக அமர்ந்து உணவு சாப்பிடுவார்கள் என அப்பகுதி மக்கள் கூறினர்.

## மேகங்களுக்கு நடுவே ஏலியன் குடும்பம்; விமான பயணி பகிர்ந்த புகைப்படத்தால் அதிர்ச்சி



போலந்து, நவ.16

மேகங்களுக்கு நடுவே ஏலியன் போன்ற தோற்றம் கொண்ட புகைப்படத்தை விமான பயணி பகிர்ந்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பொதுவாக விமானத்தில் பயணம் செல்லும் மக்கள் வானத்தில் இருக்கும் அழகை தங்களது மொபைல்களிலோ, கேமராக்களிலோ புகைப்படம் எடுப்பார்கள். அதுவும், ஜன்னல் ஓரம் இருக்கும் பயணிகள் மொபைலில் படம் பிடிக்க ஆர்வமுடன் இருப்பார்கள்.

இது போன்ற புகைப்படங்கள் வெளியாகி சில நேரங்களில் நமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. ஆனால், சில புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் உண்மையானதாகவும், சில போலியாகவும் இருக்கின்றன.

அந்தவகையில், போலந்து நாட்டின் வார்சாவில் இருந்து லண்டனுக்கு சென்றபோது பயணி ஒருவர் விமானத்தின் ஜன்னல் ஓரம் இருந்து புகைப்படங்களை எடுத்துள்ளார். அவர் எடுத்த புகைப்படம் ஒன்றில் நிழல்கள் தெரிவது போல தோன்றின.

அதாவது, மேகங்களுக்கு நடுவில் வேற்று கிரக வாசிகளின் குடும்பங்கள் நிற்பது போல தெரிந்தது. இந்த புகைப்படமானது சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், இந்த புகைப்படம் உண்மையானதா என்று தெரியவில்லை.

இந்த புகைபபடத்தை எடுத்தவர், அதனை ஏலியன்கள் தொடர்பான அப்டேட்டுகளை ஆவணப்படுத்தி வரும் MUfON என்ற தளத்திற்கு அனுப்பினார். தற்போது, இந்த விவகாரம் அதிகளவில் பேசப்பட்டு வருகிறது.

# தகைசால் தமிழர் சங்கரய்யா உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதி சடங்கு: மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, நவ.16

மறைந்த மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு மூத்த தலைவர் சங்கரய்யா உடலுக்கு அரசு மரியாதையுடன் இறுதி சடங்கு நடைபெறும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளதாவது:

தகைசால் தமிழர் முதுபெரும் பொதுவுடைமைப் போராளி, விடுதலைப் போராட்ட வீரர் தோழர் என்.சங்கரய்யா மறைந்த செய்தியால் துடிதுடித்துப் போனேன். மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த அவர் விரைந்து நலம் பெற்று விடுவார் என்றே நம்பியிருந்த வேளையில் அவர் மறைந்த செய்தி வந்து அதிர்ச்சியையும் வேதனையையும் அளித்தது.

மிக இளம் வயதிலேயே பொதுவாழ்க்கையில் ஈடுபட்டு, 102 வயது வரை இந்திய நாட்டுக்காகவும், உழைக்கும் வர்க்கத்துக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் வாழ்ந்து மறைந்த தோழர் சங்கரய்யாவின் வாழ்க்கையும் தியாகமும் என்றென்றும் வரலாற்றில் நிலைத்து நிற்கும்.

மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவராக இருந்தபோதே விடுதலைவேட்கையோடு மாணவர் சங்கச் செயலாளராகப் போராட்டங்களை முன்னெடுத்தவர் தோழர் சங்கரய்யா. அவரது தேசியம் சார்ந்த செயல்பாடுகளால் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டு படிப்பைத் துறந்தவர். இந்தியா விடுதலை பெறுவதற்கு 12 மணி நேரத்துக்கு முன்னர்தான் அவர் விடுதலை செய்யப்பட்டார். இப்படிப்பட்ட விடுதலைப் போராட்ட வீரருக்கு 2021ம் ஆண்டு விடுதலை நாளினை முன்னிட்டு நேரில் சென்று முதல் 'தகைசால் தமிழர்' விருதை வழங்கியது எனக்குக் கிடைத்த வாழ்நாள் பேறு! விருதோடு கிடைத்த பெருந்தொகையைக் கூட கொரோனா நிவாரண நிதிக்காக அரசுக்கே அளித்த தோழர் சங்கரய்யாவின் மாண்பால் நெகிழ்ந்து போனேன்.

தோழர் சங்கரய்யா ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினராகவும் திகழ்ந்து நினைவு கூரத்தக்க பல பணிகளை ஆற்றியவர். தலைவர் கலைஞரின் உற்ற நண்பராக விளங்கிய சங்கரய்யா, தலைவர் கலைஞர் நிறைவுற்றபோது, அவரது இறுதிப்பயணத்தைக் கண்டு கண்கலங்கிய காட்சி இருவருக்குமான நட்பைப் பறைசாற்றியது!

இந்திய கம்யூனிஸ்டு கட்சியிலும் அதன் பின்னர் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியிலுமாக இருந்து அவர் நடத்திய போராட்டங்களும், தீக்கதிர் நாளேட்டின் முதல் பொறுப்பாசிரியர் முதலிய பல்வேறு பொறுப்புகளில் ஆற்றிய செயல்பாடுகளும் தமிழ்நாட்டின் பொதுவுடைமை இயக்க வரலாற்றில் அவரது தவிர்க்க முடியாத ஆளுமையை வெளிக்காட்டும்.

பொதுத் தொண்டே வாழ்க்கையென வாழ்ந்த இச்செஞ்சட்டைச் செம்மலுக்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மூலமாக மதிப்புறு முனைவர் பட்டம் வழங்க ஆவன செய்யப்படும் என இந்த ஆண்டு ஜூலை 15 அன்று நான் அறிவிப்பு செய்திருந்தும், தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றை அறியாத குறுகிய மனம் படைத்த சிலரது சதியால் அது நடந்தேறாமல் போனதை எண்ணி இவ்வேளையில் மேலும் மனம் வருந்துகிறேன்.

தகைசால் தமிழர், முனைவர் மட்டுமல்ல, அவற்றிற்கும் மேலான சிறப்புக்கும் தகுதிவாய்ந்த போராளிதான் தோழர் சங்கரய்யா. சிறப்புகளுக்கு அவரால் சிறப்பு என்று சொல்லத்தக்க அப்பழுக்கற்ற தியாக வாழ்வுக்குச் சொந்தக்காரர் அவர்.

மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சித் தோழர்களுக்கும், தமிழ்நாட்டுக்கும் தோழர் சங்கரய்யாவின் மறைவு எப்போதும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவரது அனுபவமும் வழிகாட்டலும் இன்னும் சில ஆண்டுகள் கிடைக்கும் என எண்ணியிருந்த எனக்கு அவரது மறைவு தனிப்பட்ட முறையிலும் பேரிழப்பு.

சாதி, வர்க்கம், அடக்குமுறை, ஆதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராக வாழ்நாளெல்லாம் போராடிய போராளி சங்கரய்யாவை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், பொதுவுடைமை இயக்கத் தோழர்கள், பல்வேறு அரசியல் இயக்கங்களைச் சேர்ந்த நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விடுதலைப் போராட்ட வீரராக, சட்டமன்ற உறுப்பினராக, அரசியல் கட்சித் தலைவராக அவர் தமிழ்நாட்டுக்கு ஆற்றிய தொண்டினைப் போற்றும் விதமாக அவரது திருவுடலுக்கு அரசு மரியாதையுடன் பிரியாவிடை அளிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் அண்ணல் அம்பேத்கர் விருது: மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

திருப்பூர், நவ.16

2023 ஆம் அண்டுக்கானதமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்ட தமிழறிஞர்கள், கவிஞர்கள், சான்றோர் ஆகியோர்களில் சிறந்தோருக்கு திருவள்ளுவர் திருநாள் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறன. அதில் அண்ணல் அம்பேத்கரின் பெயரில் பட்டியல் இன மக்களின் முன்னேற்றத்துக்கு அரிய தொண்டு செய்பவருக்கு ஆண்டு தோறும் டாக்டர் அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது வழங்கப்பட்டு வருகிறது. 2023 – 2024 அம் ஆண்டிற்கான டாக்டர் அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது தொடர்பாக திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நபர்களிடமிருந்து விண்ணப்ப படிவங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்படி, விண்ணப்பங்களை திருப்பூர் மாவட்ட ஆட்சியர் வளாக அறை எண்.113 இல் உள்ள மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் பெற்று நவம்பர் மாத இறுதிக்குள் நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும் என கலெக்டர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்

## வண்டலூர் அருகே வீட்டின் பூட்டை உடைத்து ரூ.50 ஆயிரம் கொள்ளை

செங்கல்பட்டு, நவ.16

வண்டலூரை அடுத்த கொளப்பாக்கம் அண்ணா நகர், பெரியார் தெருவை சேர்ந்தவர் மணி. காவலாளி. இவர் வீட்டை பூட்டிவிட்டு மனைவியுடன் சென்னையில் உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வரும் மருமகனை பார்க்க வந்தார்.

பின்னர் இன்று காலை அவர்கள் திரும்பி சென்ற போது வீட்டின் கதவு பூட்டு உடைந்து கிடந்தது. பீரோவில் இருந்த ரூ.50ஆயிரம் ரொக்கம் 3 பவுன் நகையை மர்மநபர்கள் கொள்ளையடித்து சென்று இருப்பது தெரிந்தது. இதுகுறித்து ஓட்டேரி போலீசார் விசாரிக்கின்றனர்.

## சிறுவர்களுக்கான ஸ்கேட்டிங் தளம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்



சென்னை, நவ.16

சென்னை மாநகராட்சி 13வது மண்டலம் 177 வது வார்டுக்குட்பட்ட வேளச்சேரி விஜிபி செல்வா நகரில் உள்ள பெத்தேல் அவென்யூவில் ரூ. 45 லட்சம் மதிப்பீட்டில் பூங்கா மற்றும் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் சிறுவர்களுக்கான ஸ்கேட்டிங் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா இன்று மாலை நடக்கிறது. விழாவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்துகொண்டு பூங்கா மற்றும் சிறுவர்களுக்கான ஸ்கேட்டிங் தளத்தை திறந்து வைக்கிறார்.

மேலும் 177வது வார்டு கவுன்சிலர் பெ. மணிமாறனின் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ. 11 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 பயணிகள் நிழற்குடைகளையும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்து பேசுகிறார். விழாவில் தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., ஜே. எம். எச். அசன் மவுலானா எம். எல். ஏ., மேயர் பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், 13வது மண்டல குழு தலைவர் இரா. துரைராஜ், 177வது வட்ட தி.மு.க. பொருளாளர் வழக்கறிஞர் சி.வி. இளங்கோவன், வட்ட செயலாளர்கள் மதிவாணன், சக்திவேல் மற்றும் மீசை கே.ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொள்கிறார்கள்.

## தேசிய அளவிலான ஜூடோ போட்டி: தமிழக அணிக்கு கிருஷ்ணகிரி மாணவிகள் 3 பேர் தேர்வு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் வாழ்த்து

கிருஷ்ணகிரி, நவ.16

திருச்சி கொங்கு பொறியியல் கல்லூரியில் சப்ஜூனியர் ஜூடோ சாம்பியன்ஷிப் போட்டி நடந்தது. இதில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து சுமார் 400க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். இதில் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த மாணவ, மாணவி களும் பங்கேற்றனர்.

இதில் இம்மிடிநாயக்கனப்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி திவ்யா 57 கிலோ எடைப்பிரிவில் தங்கப்பதக்கமும், இதே பள்ளியை சேர்ந்த மாணவி லோகபிரியா 28 கிலோ எடைப்பிரிவில் தங்கப்பதக்கமும் பெற்றனர். இதே போல் கிருஷ்ணகிரி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவி அபிநயா 40 கிலோ எடை பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்றார். கிருஷ்ணகிரி வேளாங்கண்ணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி நித்யா ஸ்ரீ 32 கிலோ எடை பிரிவில் தங்கப்பதக்கமும், கட்டிகானப்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவி பிரியதர்ஷினி 36 கிலோ எடை பிரிவில் வெண்கலப் பதக்கமும், மாணவர் யுவராஜ் 35 கிலோ எடை பிரிவில் வெண்கலப் பதக்கமும், கிருஷ்ணகிரி விஜய் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர் பிரதீப் 55 கிலோ எடை பிரிவில் வெண்கல பதக்கமும் வென்றனர். மேலும், பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவி களையும், பெண்கள் பிரிவில் ஒட்டு மொத்த சாம்பியன்பட்டத்தை பெற்று கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த மாணவிகளையும், கேரளாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேசிய அளவிலான போட்டியில் தமிழக அணிக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மாணவிகள் திவ்யா, லோகப்பிரியா, நித்யாஸ்ரீ ஆகியோரை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மகேஸ்வரி, நேரில் வரவழைத்து பாராட்டினார்.

# திருச்சியில் பைக் வீலிங் செய்த மேலும் 9 பேர் கைது: ஓட்டுநர் உரிமத்தை ரத்து செய்ய பரிந்துரை

திருச்சி, நவ.16

திருச்சி மாவட்டத்தில் மோட்டார் சைக்கிளில் வீலிங் செய்த மேலும் 9 பேரை போலீஸார் கைது செய்தனர்.

அவர்களின் ஓட்டுநர் உரிமத்தை ரத்து செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டம் சமயபுரம் அருகே திருச்சிசிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையில் நவ.9 ம் தேதி இளைஞர்கள் சிலர் இருசக்கர வாகனத்தின் முகப்பு விளக்கில் பேன்சி ரக பட்டாசுகளை கட்டிக் கொண்டு வீலிங் செய்தவாறு வெடித்து சாகசம் செய்த காட்சி சமூக வலைதளங்களில் பரவியது. இதுதொடர்பாக திருச்சி புத்தூர் கல்லாங்காடு பகுதியைச் சேர்ந்த அஜய்(24) என்பவரை போலீஸார் கைது செய்தனர். இதுதவிர திருச்சியில் பல்வேறு இடங்களில் இருசக்கர வாகனங்களில் வீலிங் செய்த மேலும் 4 பேர் கைது செய்யப்பட்டனர்.



இதைத் தொடர்ந்து, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் இருசக்கர வாகனங்களில் வீலிங் செய்யும் இளைஞர்கள் மீது நடவடிக்கை எடுக்க மாவட்ட எஸ்.பி வருண்குமார் உத்தரவிட்டார். அதன்படி, சமயபுரம் காவல் நிலைய சரகத்துக்கு உட்பட்ட சிறுமருதூர் மேம்பாலத்தில் மோட்டார்சைக்கிளில்வீலிங்கில் ஈடுபட்ட தஞ்சாவூர் சீனிவாசபுரத்தைச் சேர்ந்த மணிகண்டன்(22), சிறுகனூர் கணபதி நகர் சக்திவேல்(20), லால்குடி தச்சங்குறிச்சி விஜய்(18) ஆகியோரை போலீஸார் கைது செய்தனர்.

இதேபோல, லால்குடி காவல் நிலைய சரகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வீலிங்கில் ஈடுபட்ட லால்குடி பனமங்கலம் அருள் முருகன்(24), கம்பரசம்பேட்டை கிரித்தீஸ்(20), கீழசிந்தாமணி வசந்தகுமார்(20), லால்குடி எசனைக்கோரை தேசிங்க பெருமாள்(18), முகமது ரியாஸ்தீன்(22) ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், ஜீயபுரம் காவல் சரகத்துக்கு உட்பட்ட முக்கொம்பு சுற்றுலா தலம் அருகே மோட்டார் சைக்கிளில் வீலிங் செய்த சிறுகனூர் இந்திரா காலனி அஜய்(20) என்பவரும் கைது செய்யப்பட்டார்.

இதுகுறித்து மாவட்ட எஸ்.பி வருண்குமார் கூறியது: திருச்சி புறநகர் பகுதியில் இருசக்கர வாகனங்களில் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் வீலிங் செய்ததாக இதுவரை 11 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 7 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அவர்களின் ஓட்டுநர் உரிமத்தை ரத்து செய்வதற்கும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்று இருசக்கர வாகனங்களில் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் வீலிங் செய்பவர்கள் குறித்த தகவல்களை 9487464651 என்ற செல்போன் எண்ணுக்கு தெரிவிக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

# பர்கூர் வழியாக மாவோயிஸ்டுகள் தப்பி செல்ல திட்டமா?

அந்தியூர், நவ.16

கேரளா மாநிலம் கண்ணூர் மாவட்டம் இரட்டி உட்பிரிவு வரம்பு கரி கோட்டகரி அடுத்த அய்யன்குன்னு அருகே உறுப்பும்குட்டி பகுதியில் மாவோயிஸ்ட்டுகள் நடமாட்டம் இருப்பதாக அந்த மாநில போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

அதன் பேரில் கேரளா மாநில போலீசார், மாவோயிஸ்ட்டு தடுப்பு பிரிவு போலீசார் மற்றும் கோடர் குழுவினர் அந்த பகுதிக்கு சென்றுதேடுதல்வேட்டை நடத்தினர். அப்போது போலீசாருக்கும், மாவோயிஸ்ட்டுகளுக்கும் இடையே தாக்குதல் ஏற்பட்டது. இதை தொடர்ந்து துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இதில் மாவோயிஸ்ட்டுகள்ஆயுதங்களை போட்டு விட்டு தப்பி சென்றனர். அவர்களுடம் இருந்து 3 ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.



இந்த தாக்குதலில் ஈடுபட்டது தமிழ்நாட்டைச் சேர்ந்த சந்தோஷ், வசந்த் ரமேஷ், கேரளாவைச் சேர்ந்த சோமன் மற்றும் மனோஜ் ஆசிக் கர்நாடகாவை சேர்ந்த ஜிஷா மற்றும் விக்ரம் கவுடா என தெரிய வந்தது.

இதையடுத்து தப்பி சென்ற மாவோயிஸ்ட்டுகளை பிடிக்க கேரளா போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும் தப்பி சென்றவர்கள் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலத்தை சேர்ந்தவர்கள் என்பதால் தமிழக போலீசாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதை தொடர்ந்து தமிழக எல்லை பகுதிகளில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஈரோடு மாவட்டம் அந்தியூர் அடுத்த பர்கூர் வழியாக கர்நாடகாவுக்கு செல்லக்கூடிய பிரதான சாலை உள்ளது. இதனால் இரு மாநில எல்லை பகுதியில் சோதனை சாவடி அமைக்கப்பட்டு உள்ளது. மேலும் வரட்டு பள்ளம் அணை அருகே வனத்துறை சோதனைசாவடியும், பர்கூர் அருகே ஒரு சோதனை சாவடியும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனைசாவடி வழியாக தினமும் ஏராளமான வாகனங்கள் கர்நாடகாமாநிலத்துக்குசென்று வருகிறது. போலீசாரும் சோதனை சாவடிகளில் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் பர்கூர் சோதனைசாவடி வழியாக கேரளாவில் இருந்து தப்பி சென்ற மாவோயிஸ்டுகள் தப்பி செல்ல வாய்ப்பு உள்ளதால் இந்த சோதனை சாவடியில் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் என ஈரோடு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு உத்தரவிட்டார்.

அதன்படி பர்கூர் சோதனை சாவடியில் சப் இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜ் தலைமையில் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக இரவு முழுவதும் சோதனையை தீவிர படுத்தி அந்த வழியாக வரும் வாகனங்களை சோதனை செய்து விசாரணை நடத்திய பிறகே அனுப்பி வைக்கிறார்கள்.

மேலும் தலைமறைவான மாவோயிஸ்டுகளின் புகைப்படங்களை வைத்தும் கண்காணித்து வருகிறார்கள்.

# கொங்கு பொறியியல் கல்லூரி மலேசிய பல்கலை.யுடன் இணைந்து கூட்டு செயல்பாடுகளை மேற்கொள்ள முடிவு

ஈரோடு, நவ.16

கொங்கு பொறியியல் கல்லூரி, மலேசிய நாட்டின் யுடிஹெச்எம் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கூட்டு செயல்பாடுகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

கொங்கு பொறியியல் கல்லூரி மற்றும் யுனிவொசிட்டி டன் ஹுசைன் ஆன் மலேசியா (யுடிஹெச்எம்) ஆகிய இரு கல்வி நிறுவனங்களுக்கு இடையேயான கூட்டுச் செயல்பாடுகள் குறித்த ஒருங்கிணைப்புக்கூட்டம் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இரு நிறுவனங்களும் தங்களுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்கெனவே கையொப்பமிட்டுள்ளன.




யுடிஹெச்எம். மின் துணைவேந்தர் (கல்வி மற்றும் சர்வதேசம்), மலேசிய பேராசிரியர் அஸ்மேகா மிஸ், மின் மற்றும் மின்னணுவியல் புலத்தின் முதன்மையர் பேராசிரியர் அஸ்மராஷித் பின் பொன்னீரன், மின் மற்றும் மின்னணு பொறியியல்துறைத் தலைவர் வான்சுஹைமிசன் வான் ஜாக்கி, மின் மற்றும் மின்னணு பொறியியல் துறை மூத்த விரிவுரையாளர் அசோக் வஜ்ரவேலு, கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை மூத்த விரிவுரையாளர்ஷம்சுல் கமால் பின் அகமது காலித் ஆகியோர் பங்கேற்றனர்.

பெருந்துறை கொங்கு பொறியியல் சார்பில் கல்லூரி தாளாளர் ஏ.கே.இளங்கோ, முதல்வர் வி.பாலுசாமி, அகாடெமிக்ஸ் தலைமை ஒருங்கிணைப்பாளர் ஜி.முருகேசன், பல்வேறு கலங்களின் தலைமை ஒருங்கிணைப்பாளர்கள், பல்வேறு துறைகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

ஆராய்ச்சி வெளியீடுகள், ஆராய்ச்சித் திட்டங்கள், ஆசிரியர் பரிமாற்றம், மாணவர் பரிமாற்றம், கருத்தரங்குகள், மாநாடு மற்றும் பயிலரங்குகள் ஆகியவை இந்நிறுவனங்களுக்கிடையே நடைபெற முடிவு செய்யப்பட்டது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் நடைபெறும் கூட்டு நடவடிக்கைகளுக்காக கொங்கு பொறியியல் கல்லூரி தாளாளர் மற்றும் முதல்வர் ஆகியோர்ஈசிஈதுறைத் தலைவர் என்.கஸ்தூரி உள்ளிட்ட துறைப் பேராசிரியர்களை பாராட்டினர்.



மாவட்ட கலெக்டர்கிறிஸ்துராஜ்திருப்பூர்மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம் மற்றும் திருப்பூர் மாவட்ட நிர்வாகம் இணைந்து நடத்தும் மாபெரும் இலவச பொது மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் லட்சுமணன், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்க நிவாகிகள் உள்ளனர்.



மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்டம் பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம் பொங்கலூர் மில் காலனி பகுதியில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் கட்டப்பட்டு பல்நோக்கு கட்டடத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் பொங்கலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜயகுமார், செல்டன் ஆகியோர் உள்ளனர்.

# வாணியம்பாடி விபத்து மீட்பு பணியின் போது உயிரிழந்த காவலர் முரளி குடும்பத்திற்கு வேலூர் சரக டிஐஜி முத்துசாமி நேரில் ஆறுதல்

வாணியம்பாடி, நவ.16

வாணியம்பாடியில் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த வாணியம்பாடி கிராமிய தலைமை காவலர் முரளி மாரடைப்பால் உயிரிழந்த நிலையில், அவரது திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்திய வேலூர் சரக டிஐஜி முத்துசாமி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

திருப்பத்தூர்: வாணியம்பாடி அடுத்த செட்டியப்பனூர் சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை பகுதியில் நேற்று முன்தினம் கடந்த நவ.11 ஆம் தேதி அரசு பேருந்தும் தனியார் சொகுசு பேருந்தும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இதில், 6 பேர் உயிரிழந்தனர். மேலும் இந்த விபத்தில் சிக்கி காயமடைந்தவர்களை திருப்பத்தூர் மாவட்ட காவல்துறையினர் மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.



அப்போது மீட்புப் பணியில் ஈடுப்பட்டிருந்த வாணியம்பாடி கிராமிய தலைமை காவலர் முரளி(46) என்பவருக்கு திடீரென மூச்சு திணறல் ஏற்பட்ட நிலையில், சக காவலர்கள் அவரை மீட்டு உடனடியாக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே மாரடைப்பால் இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதனைத்தொடர்ந்து, நேற்று தலைமை காவலர் முரளி சொந்த ஊரான ஆம்பூர் ஏ.கஸ்பா பகுதியில் உள்ள அவரது வீட்டிற்கு கொண்டு வரப்பட்டு அங்கு காவலர் முரளியின் உடல் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டது. பின்னர் அவரது உடல் ஊர்வலமாக ஏ.கஸ்பா மையானத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு 21 குண்டுகள் முழங்க த்மிழ்நாடு காவல் துறையினரின் முழு மரியாதையுடன் தலைமை காவலர் முரளியின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மேலும் உயிரிழந்த காவலர் முரளி கடந்த 2003ஆம் ஆண்டு காவலராக பணிக்கு சேர்ந்த நிலையில், கடந்த 20 ஆண்டு காலமாக ஆம்பூர் தாலுகா, நகர காவல்நிலையம், உமராபாத், வாணியம்பாடி நகரம் மற்றும் கிராமிய காவல் நிலையங்களில்காவலராக பணியாற்றி வந்துள்ளார்.

இவருக்கு திருமணம் ஆகிய நிலையில், 7ஆம் வகுப்பு படிக்கும் சஞ்சனா என்ற பெண் குழந்தையும், 5ஆம் வகுப்பு படிக்கும் லோகித் என்ற ஆண் குழந்தையும் உள்ளனர்.

இதைத்தொடர்ந்து, முரளியின் வீட்டிற்கு இன்று (நவ.13) சென்ற வேலூர் சரக டிஐஜி முத்துசாமி மற்றும் திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் ஆகியோர் தலைமை காவலர் முரளியின் திருவுருவபடத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

# பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் தயார்

தஞ்சாவூர், நவ.16

தஞ்சை மாநகராட்சி அலுவலகத்தில் கழிவுநீர், செப்டிங் டேங்க் தூய்மை படுத்துபவர்களுக்கான பாதுகாப்பு பயிற்சி கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்த கருத்தரங்கை மேயர் சண்.ராமநாதன் தொடங்கி வைத்தார்.

துணை மேயர் அஞ்சுகம் பூபதி, ஆணையர் மகேஸ்வரி முன்னிலை வகித்தனர்.



இதில் மாநகர் நல அலுவலர் சுபாஷ்காந்தி, வார்டு கவுன்சிலர்கள், தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் மேயர் சண்.ராமநாதன் பேசியதாவது :

தஞ்சை மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டு உள்ளது. அதனை சிலர் முறையாக பயன்படுத்துவதில்லை. எனவே அவர்கள் உபகரணங்களை பயன்படுத்தி தங்களை பாதுகாத்து கொள்ள வேண்டும். பாதாள சாக்கடையை ரோபோ மூலம் தூய்மைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வடக்கிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கையாக ஜே.சி.பி. எந்திரங்கள், ஆட்டோ மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் தயார் நிலையில் உள்ளன. அந்தந்த வார்டு கவுன்சிலர்கள் தங்களது பகுதியில் பாதாள சாக்கடை அடைப்பு உள்ளிட்ட எந்த பிரச்சினை என்றாலும் உடனுக்குடன் சரி செய்ய வேண்டும்.

வடகிழக்கு பருவமழைக்காக மாநகராட்சி அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது. ஏதேனும் இடர்பாடு ஏற்பட்டால் 7598016621 என்ற இலவச எண்ணை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மின்னல் பாய்ந்து உயிரிழந்த திமுக நிர்வாகி குடும்பத்துக்கு நிதியுதவி

தென்காசி, நவ.16

மின்சாரம் பாய்ந்து உயிரிழந்த கீழப்பாவூர் கிழக்கு ஒன்றியம், பெத்தநாடார் பட்டி ஊராட்சி பொட்டலூர் கிளை திமுக செயலர் ஜெயக்குமாரின் குடும்பத்துக்கு அக்கட்சியின் தென்காசி மாவட்டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன் ஆறுதல் கூறி, நிதியுதவி வழங்கினார்.



ஒன்றியச் செயலர் சிவன் பாண்டியன், ஊராட்சித் தலைவர் ஜெயராணி கலைச்செல்வன், துணைத் தலைவர் ஜெயராணி அந்தோணிராஜ், மாவட்டப் பிரதிநிதி பொன்செல்வன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ரமேஷ், இளைஞரணி கோமு, பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஆல்பின்ராய், தங்கேஸ்வரன் பங்கேற்றனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# தருமபுரி மாவட்டத்தில் அனுமதியின்றி மது விற்ற 9பேர் கைது: 270 மதுபாட்டில்கள் பறிமுதல்

தருமபுரி, நவ.16

தருமபுரி மாவட்டத்தில் தொடர்ந்து அனுமதியின்றி மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்வதாக மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டீபன் ஜேசுபாதத்திற்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதனை தடுக்கவும், கட்டுப்படுத்தவும் உடனடியாக நடவடிக்கை மாவட்ட மதுவிலக்கு போலீசாருக்கு உத்தரவிட்டார். அவரது உத்தரவின் பேரில் மாவட்டம் முழுவதும் போலீசார் தீவிரமாக சோதனை பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கம்பைநல்லூர் போலீஸ் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் நாவளவன் மற்றும் போலீசார் மொரப்பூர் சாலையில் உள்ள ஜெயம்நகர் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு சந்தேகம்படும்படி ஒருவர் கையில் சாக்குமூட்டையுடன் நின்று கொண்டிருந்தார். அப்போது அந்த நபர் போலீசாரையும் கண்டதும் தப்பி ஓட முயன்றார்.

உடனே போலீசார் அந்த நபரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்ததில், அரூர் அருகே நவலை கிராமத்தைச் சேர்ந்த மாதேஷ்வரன் (வயது52) என்பவர் அனுதியின்றி சாக்கு மூட்டையில் 30 மதுபாட்டில்களை விற்ப னைக்காக எடுத்து சென்றது தெரிய வந்தது. யஉடனே போலீசார் அவரை கைது செய்து அவரிடமிருந்து 30 மதுபாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

இதேபோன்று அரூர் போலீஸ் சப்இன்ஸ்–பெக்டர் நாகராஜூக்கு பேரேரி கிராமத்தில் அனுமதியின்றி மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்வதாக ரகசிய தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து போலீ சார் சம்பவ இடத்திற்கு வந்து சோதனை செய்தபோது, பேரேரி கிராமத்தைச் சேர்ந்த செந்தில் (32) என்பவரது வீட்டில் மதுபாட்டில்களை பதுக்கி வைத்து அனுமதியின்றி விற்பனை செய்ததும், மேலும் அதிக போதை வருவதற்காக ஊமத்தங்காய் சாறை பிழிந்து கலந்து இருப்பதும் தெரியவந்தது. அவரை போலீசார் கைது செய்து அவரிடம் இருந்து 25 மதுபாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

இதேபோன்று பொம்மிடி போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டபோது, அதே பகுதியில் உள்ள வினோ பாஜி தெருவைச் சேர்ந்த மாரியப்பன் (45) என்பவர் மதுபாட்டில்கள் விற்றதும், அதில் ஊமத்தங்காயை சாறு பிழிந்து கலந்ததும் தெரியவந்தது. அவரை போலீசார் கைது செய்து அவரிடம் இருந்து 28 மது பாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

இதேபோன்று தருமபுரி மாவட்ட மதுவிலக்கு பிரிவுபோலீசார்சோதனை செய்ததில் பாலக்கோட்டில் ஒருவரும், மற்ற இடங்களில் 5 பேரும் என மாவட்டம் முழுவதும் 9 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மொத்தம் 270 மதுபாட்டில்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

# ஜாம்புவனோடை தர்கா கந்தூரி விழா புனித கொடி ஏற்றத்துடன் தொடங்கியது

திருத்துறைப்பூண்டி, நவ.16

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை அடுத்த ஜாம்புவானோடையில் உள்ள உலக புகழ் பிரசித்தி பெற்ற சேக்தாவூது ஆண்டவர் தர்காவின் 722ம் ஆண்டு பெரிய கந்தூரி விழா கொடி ஏற்றத்துடன் தொடங்கியது.

முன்னதாக நேற்று அதிகாலை இடும்பாவனம் கேசவன்குழுவினர்நாதஸ்வரம் மங்கள இசையுடன் மத ஒற்றுமை எடுத்துக் காட்டாக தொடங்கியது.

பின்னர் மாலை 5 மணிக்கு சேக்தாவூது ஆண்டவர் அடக்க சமாதியிலிருந்துபுனிதகொடியை சிறப்பு வழிப்பாடுகள் பிராத்தனையுடன் தர்கா டிரஸ்டிகள் சுமந்து வந்து பூக்களால் அலங்காரிக்கப்பட்ட பல்லாக்கில் வைக்கப்பட்டது.

பின்னர்புனிதகொடியை சுமந்த பூ பல்லாக்கின் ஊர்வலம் தர்கா முதன்மை அறங்காவலர் எஸ்.எஸ். பாக்கர்அலி சாஹிப் தலைமையில் புறப்பட்டது.

இதில் பூக்களால் ஆன புனித கொடி சுமந்த பல்லாக்கு, கண்ணாடிகளால் அலங்கரிக்கப்பட்ட ரதங்கள், குதிரை, ஒட்டகங்கள் பேண்டு வாத்தியகங்கள், தப்ஸ் கச்சேரி, வண்ணத்துப்பூச்சி கலைஞர்களின் நடனங்கள் என ஊர்வலமாக வந்தது.

ஊர்வலம் தர்ஹாவிலிருந்து புறப்பட்டு ஜாம்புவா னோடை மேலக்காடு வழியாக ஆசாத்நகர் கோரையாறு பாலம் சென்று திருத்துறை ப் பூண்டி சாலை வழியாக பழைய பேருந்து நிலையம் சென்றது.

அங்கு ஆட்டோ சங்கம், காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சி, அமைப்பை சேர்ந்தவர்கள் நெடுவேங்கும் வியாபாரிகள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பழைய பேருந்து நிலையத்தில் நடந்த சிறப்பு பிரார்த்தனை முடிந்து அங்கிருந்து ஊர்வலம் புறப்பட்டு புதிய பேருந்து நிலையம் சென்று மீண்டும் ஆசாத்நகர் வழியாக கோரையாறு பாலம், ஜாம்புவானோடை சென்று தர்காவை அடைந்தது.

பின்னர் தர்கா அருகில் உள்ள அம்மா தர்கா, ஆற்றாங்கரை பாவா தர்கா சென்றுமீண்டும்தர்காவை ஊர்வலம் மூன்று முறை சுற்றியது.



இதையடுத்து கொடி ஏற்றும் நிகழ்ச்சி தர்ஹா முதன்மை அறங்காவலர் எஸ்.எஸ்.பாக்கர்அலி சாஹிப் தலைமையில் துவங்கியது.

சிறப்பு துஆ ஓதி அதனைத்தொடர்ந்து சிறப்பு பிராத்தனை ஓதப்பட்டு இரவு 9மணிக்கு புனித கொடி ஏற்றப்பட்டது.

அதனை தொடர்ந்து கந்தூரி விழா துவங்கியது. இதில் ஆயிரக்காணக்கான இஸ்லாமியர்கள் உட்பட அனைத்து சமூகத்தினரும் கலந்துக்கொண்டனர்.

முத்துப்பேட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு விவேகநாதன், இன்ஸ்பெக்டர் ராஜேஷ் ஆகியோர் தலைமையில் நூற்றுக்கணக்கான போலீசார் பலத்த பாதுக்காப்பு பணிகளில் ஈடுப்பட்டனர்.

கந்தூரி விழாவின் முக்கிய விழாவான வரும் 23ந்தேதி நள்ளிரவு சந்தன கூடு வளம் வருதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

வரும் 27ந்தேதி கொடி இறக்கப்பட்டு கந்தூரி விழா நிறைவு பெறுகிறது.

பொம்மிடி பகுதியில் நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்புகளால் போக்குவரத்து நெரிசலில் பொதுமக்கள்சிக்கித்தவிக்கின்றனர். எனவே, ஆக்கிரமிப்புகளை அகற்றி போக்குவரத்துநெரிசலைசீர்ப்படுத்த வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஓ.பன்னீர்செல்வத்துக்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடையை நீக்க என்ன அவசரம்? வக்கீல்களிடம் நீதிபதிகள் கேள்வி

சென்னை, நவ.16

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட ஓ.பன்னீர் செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் அ.தி.மு.க.வின் பெயர், கொடி, சின்னம் மற்றும் லெட்டர் பேடு போன்றவற்றை பயன்படுத்த தடை விதிக்கக் கோரி அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.



இந்த வழக்கை கடந்த 7ந்தேதி விசாரித்த தனி நீதிபதி என்.சதீஷ்குமார், அ.தி.மு.க.வின் பெயர், கொடி, சின்னம், லெட்டர் பேடு போன்றவற்றை ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவரது தரப்பினர் பயன்படுத்தக் கூடாது என இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார்.

தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து ஓ.பன்னீர் செல்வம் தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனு 15 ந்தேதி (இன்று)விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதிபதிகள் தெரிவித்திருந்தனர்.

அதன்படி இந்த மனு இன்று நீதிபதிகள் ஆர். மகாதேவன், முகமது ஷபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் மூத்த வக்கீல்கள் அரவிந்த் பாண்டியன், அப்துல் சலீம் ஆகியோர் ஆஜராகி, 'தனி நீதிபதி என். சதீஷ்குமார் பிறப்பித்த இடைக்கால உத்தரவு அசல் ஆவணம் இதுவரை கிடைக்கவில்லை. அதை தாக்கல் செய்ய அவகாசம் வேண்டும். அதுவரை ஓ. பன்னீர்செல்வம் அ.தி.மு.க. பெயர், கொடி, சின்னம் மற்றும் லெட்டர் பேடுகளை பயன்படுத்தக் கூடாது என்று தனி நீதிபதி பிறப்பித்த தடையை நீக்க வேண்டும்' என்று வாதிட்டனர்.

அதற்கு நீதிபதிகள் அந்த இடைக்கால தடையை நீக்குவதற்கு என்ன அவசரம் ஏற்பட்டுள்ளது? என்று கேள்வி எழுப்பினர். பின்னர் இந்த வழக்கை நாளை (16ந்தேதி) காலையில் முதல் வழக்காக விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# கிணற்றில் தவறி விழுந்தவர் காயத்துடன் மீட்பு

ஏற்காடு, நவ.16

சேலம் மாவட்டம் ஏற்காடு எம்.ஜி.ஆர். நகர் பகுதியை சேர்ந்தவர் செல்வமணி (55). இவர் இன்று காலை சுமார் 9 மணியளவில் வீட்டின் அருகில் உள்ள தனக்கு சொந்தமான கிணற்றை சுற்றி இருந்த முட்புதர்களை வெட்டி சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தார். கடந்த 2 நாட்களாக பெய்து வந்த மழையினால் கிணற்றை சுற்றி சேறும், சகதியுமாக இருந்துள்ளது.



இதனால் எதிர்பாராத விதமாக கால் வழுக்கி 20 அடி ஆழம் உள்ள அந்த கிணற்றில் செல்வமணி தவறி விழுந்தார். அவரது அலறல் சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் கொடுத்தனர். விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர், போலீசார் மற்றும் பொதுமக்கள் உதவியுடன் செல்வகுமாரைஉயிருடன் மீட்டனர். அவருக்கு காலில் முறிவு ஏற்பட்டது. இதையடுத்து முதல் உதவி செய்யப்பட்டு ஏற்காடு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

# பெண் ஊராட்சி மன்றத்தலைவரை வெட்ட அரிவாளுடன் ஓடிவந்த வீட்டு உரிமையாளர்

திருச்சுழி, நவ.16

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி ஒன்றியம் வேளானேரி கிராமத்தை சேர்ந்தவர் சங்கிலி (வயது 55). இவரது குடும்பத்தினர் கடந்த பல வருடங்களாக பொதுமக்கள்நடந்து செல்லும் பாதையை ஆக்கிரமித்து காம்பவுண்டு சுவரை கட்டி தெருவை மறைத்து வருவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் அந்த வழியாக நடந்து செல்லும் பொதுமக்களை சங்கிலியும், அவரது குடும்பத்தினரும் நாள்தோறும் ஆபாசமாகவும் மிகவும் தரக்குறைவாக பேசி வருவதாகவும் புகார் எழுந்தது. இதனால் அந்த பாதையை கடந்து தங்களது வீடுகளுக்கு சென்று வருவதில் கடும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

தனிப்பட்ட ஒரு குடும்பத்தினர் பொதுப்பாதையை ஆக்கிரமித்துள்ளது குறித்து வேளானேரி ஊராட்சி மன்றத்தலைவரான போதும்பொண்ணு முனியாண்டியிடம் அப்பகுதி குடியிருப்பு பொதுமக்கள் புகார் அளித்தனர்.

மேலும் ஊராட்சி மன்ற தலைவர் போதும் பெண்ணு,

இதுகுறித்து நரிக்குடி ஒன்றியபி.டி.ஓ., திருச்சுழி தாசில்தார் ஆகியோரிடம் புகாரளித்தார். அந்த பகுதியை அளந்து ஆக்கிரமிப்பு இருந்தால் பாரபட்சமின்றிஅகற்றஉடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக ஊராட்சியில் தீர்மானமும் நிறைவேற்றிய நிலையில் அளவீடுகள் செய்வதற்கான கட்டணமும் ஊராட்சி நிர்வாகம் சார்பில் செலுத்தப்பட்டது. இதனால் சங்கிலி குடும்பத்தினருக்கும், ஊராட்சி மன்றத்தலைவர் போதும்பொண்ணுவுக்கும் இடையே பகை மூண்டது.

இதற்கிடையில் தாசில்தார் தலைமையிலான வருவாய்த்துறையினர் மேற்கொண்ட ஆய்வில் சுமார் 10அடி பொதுப்பாதையை மறைத்து சங்கிலி குடும்பத்தினர் காம்பவுண்டு சுவர் கட்டியது உறுதியானது. அந்த காம்பவுண்டு சுவரை அகற்ற வருவாய்த்துறையினர் தயாராகினர்.

இதற்காக போலீஸ் பாதுகாப்புடன் அதிகாரிகள் அங்கு சென்றபோது கடும் எதிர்ப்பு தெரிவித்த சங்கிலி குடும்பத்தினர் திடீரென தங்களது உடலில் மண்எண்ணையை ஊற்றிக் கொண்டு தீக்குளிக்க முயன்றனர். இதையடுத்து அரசு அதிகாரிகளை பணி செய்ய விடாமல் தடுத்த சங்கிலி குடும்பத்தினரை போலீசார் எச்சரித்தனர். அதன் பிறகு ஓரிரு நாட்களில் தாங்களாகவே ஆக்கிரமிப்பை எடுத்துக்கொள்வதாக சங்கிலி குடும்பத்தினர் கேட்டுக்கொண்டதன் பேரில் அரசு அதிகாரிகள் சில நாட்கள் அவகாசம் அளித்தனர்.

அதற்கு பிறகும் ஆக்கிரமிப்பை அகற்றிக்கொள்ளவில்லை என ஊராட்சி நிர்வாகம் சார்பில் மீண்டும் புகாராளிக்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த சங்கிலி குடும்பத்தினர் இதற்கெல்லாம் ஊராட்சி மன்றத் தலைவர் போதும் பொண்ணுதான் காரணம் என்று கூறி பெண் என்றும் பாராமல் தரக்குறைவாக பேசி வந்தனர்.

கடந்த மாதம் 18ந்தேதி மீண்டும் ஆக்கிரமிப்பை அகற்றும் முயற்சியும் தள்ளிப்போனது. இதனால் காம்பவுண்டு சுவரை கடந்து செல்லும் பொது மக்கள் மேலும் சிரமத்திற்கு ஆளாகினர்.

இந்த நிலையில் நேற்று காலை மீண்டும் சங்கிலி குடும்பத்தினர் பொதுமக்கள் நடந்து செல்லும் பொதுப்பாதையை மண் கொண்டு வழி மறித்து அடைத்ததாக கூறப்படுகிறது. இதனை தட்டிக் கேட்ட ஊராட்சி மன்றத்தலைவர் போதும் பொண்ணுவை வெட்ட அரிவாளுடன் சங்கிலி ஆவேசமாக வந்துள்ளார்.

இதனால் அச்சமடைந்த போதும்பொண்ணு தனது கணவரான முனியாண்டியுடன் நரிக்குடிபோலீஸ்நிலையத்தில் தஞ்சமடைந்தார்.

தனது உயிருக்கு பாதுகாப்பு கோரியதுடன் அரிவாளை காட்டி கொலை மிரட்டல் விடுத்த சங்கிலி மற்றும் அவரை தூண்டி விட்ட சங்கிலியின் மனைவியான ஜோதிலட்சுமி ஆகியோர் மீதும் புகார் அளித்தார்.

அத்துடன் ஆக்கிரமித்து கட்டியுள்ள காம்பவுண்டு சுவரால்உயிர்பலிபோன்ற பெரும் அசம்பாவிதங்கள் ஏற்படும் முன்விரைவில் அந்த சுவரை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஊராட்சி சார்பில் மாவட்ட நிர்வாகத்திற்கும் கோரிக்கைவிடுத்துள்ளார்.

# தி.மு.க. இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம்

நாமக்கல், நவ.16

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நேற்று மாவட்ட அவை தலைவர் மணிமாறன் தலைமையில் நாமக்கல்லில் நடந்தது. வனத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன், எம்.எல்.ஏ.க்கள் ராமலிங்கம், பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர்.



இதில் கிழக்கு மாவட்ட செயலாளர்ராஜேஸ்குமார் எம்.பி. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசினார். அப்–போது அவர் கூறியதாவது:

வருகிற டிசம்பர் மாதம் 17ந் தேதி சேலத்தில், இளைஞரணியின் 2வது மாநில மாநாடு நடக்கிறது. அதில் பங்கேற்கும் இளைஞரணி பட்டியல் இறுதி செய்யப்பட்டதில், தமிழகத்திலேயே அதிக அளவில் பெயர் கொடுத்த முதல் 2 மாவட்டங்களில் ஒன்று நாமக்கல், மற்றொன்று சேலம்.

இதையொட்டி வருகிற 18ந் தேதி காலையில் சேலத்தில் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தை முடித்துவிட்டு, தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மதியம் நாமக்கல் மாவட்டம் வருகை தருகிறார். அன்று மாலை 4 மணிக்கு நாமக்கல் பொம்மைகுட்டைமேடு பகுதியில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் பேசுகிறார். இதில் பங்கேற்கும் அனைவரும் வெள்ளை சீருடையில் கலந்து கொள்ள வேண்டும்.

நாமக்கல் மாவட்டத்தில் ரூ.140 கோடியில் போதமலைக்கு சாலை அமைக்கின்ற திட்டம், ரூ.190 கோடி மதிப்பில் நாமக்கல் புறவழிச்சாலை திட்டம் என 2 திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. இது எந்த அரசியல் கட்சியாலும் செய்ய முடியாத திட்டமாக அமைந்து உள்ளது. இந்த திட்டங்களுக்கு விதித்திட்டவர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆவார்.

மேலும் எருமப்பட்டி, சேந்தமங்கலம், மோகனூர், பரமத்திவேலூர், கபிலர்மலை, நாமக்கல் ஒன்றியங்களை இணைத்து ரூ.750 கோடி மதிப்–பில் புதிய கூட்டுக்குடிநீர் திட்டம் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. இந்த திட்டத்தை செயல்படுத்தினால் நாமக்கல் மாவட்டத்தில் குடிநீர் பிரச்சினைஇல்லாதநிலை ஏற்படும்.

இவ்வாறு அவர் பேசினார். நாமக்கல் வருகை தரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு கொடுப்பது என்றும், செயல்வீரர்கள் கூட்டத்தில் கிழக்கு மாவட்டத்தில் இருந்து 5 ஆயிரம் இளைஞர்களை பங்கேற்க செய்வது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# அமிர்தகடேஸ்வரர் கோவிலில் மழைநீர் தேங்கியது

மயிலாடுதுறை, நவ.16

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் அமிர்தகடேஸ்வரர் கோவில் உள்ளது. சிறப்பு பெற்ற இந்த கோவிலில் ஆண்டுதோறும் வடகிழக்கு பருவமழை காலங்களில் மழை நீர் உள் பிரகாரத்தை சுற்றி தேங்கி நிற்கும்.

தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் பலத்த மழை பெய்து வருகிறது.

வழக்கமாக கோவில் வளாகத்தில் உள்ள மழை நீர் கோவில் பின் புறம் உள்ள தீர்த்த குளத்தில் நிரம்பிய பிறகு மின் மோட்டார் மூலம் வெளியேற்றப்படும்.

கடந்த ஆண்டு கோவில் உள் பிரகாரத்தில் வெள்ளநீர் சூழ்ந்ததால் பக்தர்கள் அவதிப்பட்டனர்.

இந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் மழைநீர் கோவில் வளாகத்தில் தேங்காதவாறு கோவில் நிர்வாகிகள் மின் மோட்டார் மூலம் உடனுக்குடன் மழைநீரை வெளியேற்றும் பணியை தொடங்கியுள்ளனர்.




இதனால் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்

# தில்லைவிளாகம் அரசு பள்ளிக்கு கேடயம்

திருவாரூர்:, நவ.16

திருவாரூர் மாவட்டத்தில் 3 அரசு பள்ளிகள் சிறந்த பள்ளியாக தேர்வு செய்யப்பட்டு பள்ளிக்கல்வித்துறை சார்பில் கேடயம் வழங்கப்பட்டது.

இதில் தில்லை விளாகம் கிழக்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு கேடயம் வழங்கப்பட்டுள்ளது.



கேடயத்தை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி வழங்கினார்.

இந்த பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பறைகள், காற்றோட்டமான வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளன. பெண் குழந்தைகளுக்கு கராத்தே பயிற்சி வழங்கப்படுகிறது.

இந்த நிலையில் இந்த பள்ளி சிறந்த பள்ளியாக தேர்வு செய்யப்பட்டுள்ளதற்கு ஊராட்சி மன்ற தலைவர் காசிநாதன் மற்றும் கிராம மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

# இளம் பெண்ணுக்கு கொலை மிரட்டல் விடுத்தவர்கள் கைது

நாகப்பட்டினம், நவ.16

நாகைமாவட்டம்வேதாரண்யத்தை அடுத்த கோடியக்காடுமெயின்ரோட்டை சேர்ந்தவர் மணிகண்டன்.

இவரது மனைவி கொடியரசி (வயது 28). இவருக்கும், அதே ஊரைச் சேர்ந்த முருகானந்தம் (23), ரஞ்சித் (22) ஆகியோருக்கும் முன் விரோதம் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் சம்பவத்தன்று முருகா னந்தமும், ரஞ்சித்தும் சேர்ந்து கொடியரசி வீட்டின் அருகே சென்றுள்ளனர். பின்னர் வீட்டில் இருந்த கொடியரசியை தரக்குறைவாக பேசி கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது. இது குறித்து கொடியரசி வேதாரண்யம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.


புகாரின் பேரில் வேதாரண்யம் போலீசார் வழக்குப்பதிவு செய்து முருகானந்தம், ரஞ்சித் ஆகிய 2 பேரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 16.11.2023



# அஜித் மட்டும் ஓகே சொன்னா தெறிக்கவிட்ரலாம் மாஸ்டர் பிளான் போடும் அட்லீ



'ராஜா ராணி' படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு இயக்குனராக அறிமுகமான அட்லீ, அதன் பின்னர் விஜய்யை வைத்து தெறி, மெர்சல், பிகில் எனஅடுத்தடுத்துஹிட்படங்களை இயக்கினார்.

இவர் இயக்கத்தில் ஷாருக்கான் நடிப்பில் சமீபத்தில் வெளியான திரைப்படம் 'ஜவான்'.நயன்தாரா நாயகியாக நடித்திருந்த இப்படத்தில் விஜய் சேதுபதி வில்லன் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். பான் இந்தியா படமாக உருவான இப்படம் பாக்ஸ் ஆபீஸில் ரூ.1000 கோடிக்கு மேல் வசூலை குவித்து பாலிவுட் படங்களை பின்னுக்கு தள்ளியது. இதையடுத்து அட்லீ அடுத்தது எந்த நடிகருடன் இணையவுள்ளார் என ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில், இயக்குனர் அட்லீ, அஜித்தை இயக்கவுள்ளதாகதகவல் வெளியாகியுள்ளது. அதாவது, நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்ட அட்லீ, "ஆரம்பம் படத்தின் படப்பிடிப்பின் போது நடிகை நயன்தாரா மூலமாக அஜித்தை சந்தித்தேன். அப்போது அவர் என்னைபார்த்ததும்பள்ளிபடிப்பைமுடித்துவிட்டாயா? என்று கேட்டார். என் கஷ்டமான நாட்களில் அவர் எனக்கு ஆறுதலாக இருந்தார். அஜித் சாருக்காக பயங்கரமான ஒரு கதையை ரெடி செய்துள்ளேன். அவர் ஓகே என்று சொல்லிவிட்டால் படப்பிடிப்பை தொடங்கிவிடலாம்" என்று பேசியதாக கூறப்படுகிறது.



# சச்சின் காம்ப்ளி வாழ்க்கையைத் தழுவி படம்! கௌதம் மேனன் தகவல்

தமிழ் சினிமாவில் முன்னணி இயக்குனர் மற்றும் நடிகராக வலம் வருபவர் கவுதம் வாசுதேவ் மேனன். இவர்இயக்கத்தில்உருவாகி இருக்கும்துருவநட்சத்திரம் திரைப்படம் விரைவில் வெளியாக இருக்கிறது.

இந்த நிலையில், துருவ நட்சத்திரம் படத்திற்கான விளம்பரபணிகளுக்காகஅவர்மும்பைசென்றிருக்கிறார். இன்று நடைபெற்ற உலகக் கோப்பை அரையிறுதி போட்டியின்போதுதனியார்தொலைகாட்சிநிகழ்ச்சியில் கலந்து கொண்ட கவுதம் வாசுதேவ் மேனன், பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

அதன்படி நடிகர் ஆர்.ஜே. பாலாஜி கேட்ட கேள்விக்கு பதில் அளித்த கவுதம் வாசுதேவ் மேனன், கிரிக்கெட்டை மையமாக கொண்டு புதிய படம் இயக்க இருப்பதாக தெரிவித்து இருக்கிறார். மேலும் சச்சின் டெண்டுல்கர் மற்றும் காம்ப்ளியை அடிப்படையாக வைத்து இந்த படத்தின் கதையை உருவாக்கி இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.



# என்னமா இப்படி பண்றீங்களே.. விமர்சனத்துக்குள்ளான பிரியா வாரியர்

'அடர் லவ்' என்ற படத்தின் மூலம் மலையாள சினிமாவில் அறிமுகமானவர் பிரியா பிரகாஷ் வாரியர். இந்த படம் வெளி வருவதற்கு முன்பே பிரியா வாரியர் தனது கண்களை சிமிட்டி வெளியிட்ட புகைப்படங்கள் மலையாள சினிமா மட்டும் இன்றி இந்திய திரை உலகத்தையே இவரை திரும்பிப் பார்க்க வைத்தது. இதையடுத்து அவருக்கு பாலிவுட் பட வாய்ப்புகள் வந்தது. முன்னாள் கதாநாயகி ஸ்ரீதேவி பெயரில் தயாரான இந்தி படத்தில் பிரியா வாரியர் நடித்து வந்தார்.

அந்தப் படத்தின் மீது ஸ்ரீதேவியின் கணவர் போனி கபூர்கோர்ட்டில்வழக்குதொடர்ந்ததால்படம்வெளியில் வராமல் முடங்கியது. இந்நிலையில் பிரியா வாரியர் இன்ஸ்டாகிராம்பக்கத்தில்அடிக்கடிதனதுகவர்ச்சியான புகைப்பட ங்களை வெளியிட்டு வருகிறார். அவ்வாறு அவர் வெளியிட்டுள்ள அவரது புகைப்படங்கள் ரசிகர்கள் மத்தியில் பல்வேறு விமர்சனங்களுக்கு ஆளாகியுள்ளது.



# சொல்ல போதுமான வார்த்தைகள் இல்லை சந்தோஷ் நாராயணன் நெகிழ்ச்சி

'ஜிகர்தண்டா' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து 8 வருடங்களுக்கு பிறகு இந்த படத்தின் இரண்டாம் பாகம் உருவானது. தீபாவளியை முன்னிட்டு வெளியாகி இருக்கும் இந்த படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்துள்ளது.

கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ள இந்த படத்தில் எஸ்.ஜே.சூர்யா மற்றும் ராகவா லாரன்ஸ் முக்கிய கதாபாத்திரத்தில்நடித்துள்ளனர். இந்தபடத்திற்குசந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். இப்படம் இதுவரை ரூ.17கோடிக்குமேல்வசூல்செய்துள்ளதாககூறப்படுகிறது. இப்படத்திற்கு பலரும் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

அதுமட்டுமல்லாமல், 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்' படத்தை பார்த்த நடிகர் ரஜினிகாந்த் படக்குழுவினரை பாராட்டி சமூக வலைதளத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அதுமட்டுமல்லாமல், நேரிலும் அவர்களை சந்தித்து வாழ்த்துகளை பகிர்ந்தார்.

இந்நிலையில் ரஜினி குறித்து சந்தோஷ் நாராயணன் தனது சமூக வலைதளத்தில் நெகிழ்ச்சியாக பகிர்ந்துள்ளார். அதில், "எல்லோரும் வியந்து நோக்கும் ஒருவரிடம் இருந்து மனமார்ந்த பாராட்டு பெறுவது என்பது கிடைத்தற்கரிய பேறு. எமது அருமைத் 'தலைவர்', சூப்பர் ஸ்டாரிடம் இருந்து இன்று நாம் அப்பேற்றைப் பெற்று அகமகிழ்ந்து, உளம் நெகிழ்ந்து நிற்கிறோம்.

இப்பாராட்டு எம்மை மேன்மேலும் கடினமாக உழைக்கவும்இன்னும்சிறந்தபடைப்புகளைஉருவாக்கவும் உந்துதலாகவும் உறுதுணையாகவும் நிற்கின்றது. சொல்லப் போதுமான வார்த்தைகள் இல்லை, எனினும் சுருக்கமாகவும் உருக்கமாகவும் சொல்கிறோம், "நன்றிகள் கோடி, தலைவரே" என்று பதிவிட்டுள்ளார்.

எல்லோரும் வியந்து நோக்கும் ஒருவரிடம் இருந்து மனமார்ந்த பாராட்டுப் பெறுவது என்பது கிடைத்தற்கரிய பேறு. எமது அருமைத் 'தலைவர்', சூப்பர் ஸ்டாரிடம் இருந்து இன்று நாம் அப்பேற்றைப் பெற்று அகமகிழ்ந்து, உளம் நெகிழ்ந்து நிற்கிறோம்.



# ரசிகையின் தளர்ந்த குரலை கேட்டதும் விஷால் சொன்ன ஒத்த வார்த்தை.. நெகிழ்ந்த நெட்டிசன்கள்

சாமி, அருள், ஆறு, சிங்கம் உள்ளிட்ட படங்களை இயக்கிய இயக்குனர் ஹரி தற்போது புதிய படம் ஒன்றை இயக்குகிறார். இப்படத்தில் விஷால் கதாநாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக பிரியா பவானி சங்கர் நடிக்கிறார். மேலும், கவுதம் மேனன், சமுத்திரகனி மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

'விஷால் 34' என தற்காலிகமாக பெயர் வைத்துள்ள இப்படத்தை ஜீ ஸ்டுடியோஸ் சவுத் மற்றும் இயக்குனர் கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன்பெஞ்ச் ஃபிலிம்ஸ் இணைந்துதயாரிக்கின்றனர். இப்படத்தின்படப்பிடிப்பு வேலூர் கோட்டை ஜலகண்டேஸ்வரர் கோவில் அருகே இன்று நடந்தது.

இந்நிலையில், நடிகர் விஷால் படப்பிடிப்பு தளத்தில் விவசாயிகளை சந்தித்தார். அப்போது அவர்களுடன் வந்திருந்தபெண்ஒருவரைபார்த்துவிஷால்சாப்டியாமா? என்று கேள்வி கேட்க அதற்கு அந்த பெண் இல்லை என்று பதிலளித்தார். பதற்றமடைந்த விஷால் அருகில் இருந்தவரை பார்த்து முதல்ல சாப்பாடு போடுங்க என்று காட்டமாககூறினார். இந்தவீடியோசமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது. இதனை பார்த்த ரசிகர்கள் 'உங்கள் ரசிகன் என்று சொல்ல பெருமையாக இருக்கிறது' என்று கமெண்ட் செய்து வருகின்றனர்.



# மிருணாளுடன் காதல்.. இணைய ரசிகர்களை பரபரப்பாக்கிய ராப் பாடகர்

பாலிவுட் நடிகையான மிருணாள் தாகூர், இயக்குனர் ஹனு ராகவபுடி இயக்கத்தில் துல்கர் சல்மானுக்கு ஜோடியாக 'சீதா ராமம்' படத்தில் நடித்து இந்தியா முழுவதும் பிரபலமானவர். பான் இந்தியா திரைப்படமாக வெளியான இப்படம் பெரும் வரவேற்பை பெற்றது. இப்படத்தின் மூலம் மிருணாள் தாகூர் திரையுலகில் தனக்கான இடத்தை பெற்றார். மேலும், இவருக்கு பல மொழிகளில் பட வாய்ப்புகள் குவிந்து வருகின்றன.

இவர் இப்போது, தெலுங்கில் நானிக்கு ஜோடியாக 'ஹாய் நான்னா' திரைப்படத்தில் நடித்துள்ளார். அதுமட்டுமல்லாமல், விஜய் தேவரகொண்டாவுடன் 'ஃபேமிலி ஸ்டார்' படத்திலும் நடித்து வருகிறார். ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கும் புதிய படத்திலும் மிருணாள் தாகூர் நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் மிருணாள் தாகூர் பிரபல இந்தி ராப் பாடகரும் பாடலாசிரியருமான ஆதித்யா பிரதோக் சிங்கை காதலித்து வருவதாக தகவல் வெளியானது. அதாவது, நடிகை ஷில்பா ஷெட்டி நடத்திய தீபாவளி பார்ட்டியில், இருவரும் கைகோத்தபடி ஒன்றாக செல்லும் வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி இருவரும் காதலிப்பதாக செய்திகள் பரவி வந்தன.

இந்நிலையில்இதற்குபதிலளித்துள்ள ஆதித்யாபிரதோக் சிங் , "இணைய நண்பர்களே, உங்களை ஏமாற்றியதற்கு மன்னியுங்கள். நீங்கள் நினைப்பது போல் எதுவுமில்லை" என்று தெரிவித்துள்ளார்.

# பாபர் அசாம் ராஜினாமா புதிய கேப்டன்களை நியமித்தது பாகிஸ்தான்



கிரிக்கெட்டின் அனைத்து ஃபார்மேட்களில் இருந்தும் கேப்டன் பொறுப்பை ராஜினாமா செய்வதாக இன்று மாலை பாபர் ஆசாம் அறிவித்திருந்தார்.

நடப்பு உலக கோப்பை தொடரில் லீக் சுற்றிலேயே பாகிஸ்தான் அணி வெளியேறியதை தொடர்ந்து 50 ஓவர், டி20, டெஸ்ட் என அனைத்து ஃபார்மேட்களில் இருந்தும் கேப்டன் பொறுப்பை பாபர் ஆசாம் ராஜினா செய்தார்.

"இது கடினமான முடிவு, ஆனால் இது சரியான நேரம் என்று நினைக்கிறேன்" என்று பாபர் அசாம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய கேப்டன்களை அதன் கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

அதன்படி, டி20 போட்டிகளுக்கு சஹீன் ஷா அஃப்ரிடியும், டெஸ்ட் போட்டிகளுக்கு ஷான் மசூத் கேப்டனாக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

# 50வது சதம்.. அன்று என்னாலேயே சிரிப்பை அடக்க முடியவில்லை.. இன்று..? சச்சின் நெகிழ்ச்சி



உலகக்கோப்பைஅரையிறுதிபோட்டியில்விராட்கோலிஅபாரமானஆட்டத்தைவெளிப்படுத்தினார். நடப்பு உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் தொடர்ந்து சிறப்பாக விளையாடி வரும் விராட் கோலி, இன்று (நவம்பர் 15) சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தனது 50வது சதத்தை விளாசி சரித்தர சாதனை படைத்திருக்கிறார்.

ஒருநாள் போட்டிகளில் 50வது சதம் அடித்த விராட் கோலிக்கு முன்னாள் வீரர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பலர் தங்களின் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். அந்த வரிசையில், சச்சின் டெண்டுல்கர் விராட் கோலிக்கு தனது பாராட்டுக்களை தெரிவித்து உள்ளார்.

இது குறித்த எக்ஸ் பதிவில், "முதல் முறை இந்திய டிரெசிங் ரூமில் உன்னை பார்த்தேன், நீ என் காலில் விழுந்ததை சக வீரர்கள் நக்கலடித்தனர். அன்று என்னால் எனது சிரிப்பை கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால், உனது திறமை மற்றும் ஆர்வத்தால் நீ விரைவிலேயே என் மனதை தொட்டுவிட்டாய். ஒரு இளைஞன் "விராட்" எனும் வீரராக உருவெடுத்து இருப்பதை நினைத்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்."

"ஒரு இந்தியர் எனது சாதனையை முறியடித்ததில் எனக்கு மகிழ்ச்சி அதிகம் தான், அதுவும் இத்தனை பெரிய போட்டி உலகக் கோப்பை அரையிறுதியில் எனது ஹோம் கிரவுண்டில் முறியடித்தது கேக் மீது ஐஸ் வைத்ததை போன்று இருந்தது," என்று குறிப்பிட்டுள்ளார்.

# ரன் மழை பொழிந்த கோலி, ஷ்ரேயஸ்.. நியூசிலாந்துக்கு 398 ரன்களை இலக்காக நிர்ணயித்தது இந்தியா



உலகக் கோப்பை 2023 கிரிக்கெட் தொடரின் அரையிறுதி போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. இந்திய அணிக்கு துவக்க வீரர்களாக களமிறங்கிய கேப்டன் ரோகித் சர்மா மற்றும் சுப்மன் கில் ஜோடி சிறப்பான துவக்கத்தை கொடுத்தது. ரோகித் சர்மா 29 பந்துகளில் 47 ரன்களை விளாசி அவுட் ஆனார். இதில் 4 பவுண்டரிகளும், 4 சிக்சர்களும் அடங்கும்.

இவருடன் ஆடிய சுப்மன் கில் 65 பந்துகளில் 79 ரன்களை குவித்த நிலையில், காயம் காரணமாக களத்தை விட்டு வெளியேறினார். அடுத்து வந்த விராட் கோலி சிறப்பாக விளையாடி ரன்களை குவித்தார். சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் தனது 50வது சதத்தை அடித்த விராட் கோலி 117 ரன்களில் தனது விக்கெட்டை பறிக் கொடுத்தார்.

ஷ்ரேயஸ் அய்யர் தன் பங்கிற்கு 105 ரன்களையும், கே.எல். ராகுல் 39 ரன்களையும் குவிக்க, இந்திய அணி போட்டி முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 397 ரன்களை குவித்துள்ளது. நியூசிலாந்து சார்பில் டிம் சௌதீ 3 விக்கெட்டுகளையும், போல்ட் 1 விக்கெட்டையும் வீழ்த்தினார்.

# உலக கோப்பை அரையிறுதி: இந்தியா வெற்றிபெற மணல் சிற்பம் வரைந்து வாழ்த்திய சுதர்சன் பட்நாயக்

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்தவர் சுதர்சன் பட்நாயக். சிறந்த மணல் சிற்ப கலைஞரான இவர், உலகில் நடந்து வரும் அனைத்து விஷயங்கள் தொடர்பாக தனது கருத்தை தயங்காமல் தெரிவித்து வருபவர். எந்த விஷயமானாலும் அது தொடர்பாக ஒடிசா கடற்கரையில் மணல் சிற்பங்களை வரைந்து வருபவர். பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். இதற்கிடையே, உலக கோப்பை தொடரின் முதல் அரையிறுதி போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறுகிறது. இதில் இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. பல்வேறு பிரபலங்கள் இந்திய அணிக்கு தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், உலக கோப்பை அரையிறுதியில் இந்தியா வெற்றிபெற வேண்டி, மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக், பூரி கடற்கரையில் மணல் சிற்பம் வரைந்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.